# பாலியல் வன்முறையை விளங்கிக்கொள்ளல்

## பாலியல் தொந்தரவு, தாக்குதல் மற்றும் துன்புறுத்தல் என்றால் என்ன?

பின்வரும் பாலியல் நடத்தை எதுவாயினும் அது பாலியல் வன்முறை ஆகும்: (a) ஒருவருடைய சுய விம்பம், பாலியல் ஆர்வம் மற்றும் உடலை அவமதித்தல்; (b) ஒருவருடைய மனரீதியான, உடல்ரீதியான, உணர்ச்சிரீதியான மற்றும் ஆன்மீகரீதியான நல்வாழ்க்கையைக் கெடுத்தல், மற்றும்/அல்லது (c) பாதுகாப்பின்மை உணர்வுகளை விளைவாக்கல். அனைத்துவிதமான பாலியல் அடையாளம் உள்ளவர்களும் பாலியல் வன்முறையை அனுபவிக்கக்கூடும்.

**உதாரணங்கள் உள்ளடக்குபவை:**

- **தொந்தரவு**: ஒருவருடைய உடல் உறுப்புகள் மற்றும்/அல்லது அவர்கள் அணிந்திருப்பவை பற்றிய விரும்பத்தகாத கருத்துரைகள்
- **தாக்குதல்**: வேலையிடத்தில், பாடசாலையில் மற்றும்/அல்லது சமூகத் திட்டங்களை மற்றும் சேவைகளை அணுகும்போது விரும்பத்தகாத பாலியல் முன்னெடுப்புகள்; தற்போதைய அல்லது கடந்தகாலத் துணைவர் ஒருவரினால் பாலியல் தாக்குதல் மற்றும் பாலியல் அடையாளத்தை மாற்ற முயற்சிக்கும் பாலியல் வன்முறை (corrective rape) உள்ளடங்கலான பாலியல் வன்முறை; மற்றும் பிள்ளைப்பராயத்தில் பாலியல் தாக்குதல்
- **துன்புறுத்தல்**: பிள்ளைப்பராயத்தில் பாலியல் தாக்குதல் உள்ளடங்கலாக ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நிகழும் பாலியல் வன்முறை; தற்போதைய மற்றும்/அல்லது கடந்தகாலத் துணைவர் ஒருவரினால் பாலியல் வன்முறை; அச்சுறுத்தல் அல்லது அழுத்தம் மூலம் பலவந்தமான பாலியல் செயல்பாடு; மற்றும் ஆணுறைகள், வாய்மூலமான பாலியல் உறவில் பாவிக்கும் பல் அணைகள் (dental dams), மற்றும்/அல்லது கருத்தடைகளைப் பயன்படுத்த மறுத்தல்

## பாலியல் வன்முறை எவ்வளவு தூரம் பொதுவானது?

பெண்களில் மூன்றில் ஒருவரும் ஆண்களில் ஆறில் ஒருவரும் அவர்களுடைய வாழ்க்கைக் காலத்தில் ஏதோ ஒருவகையான பாலியல் வன்முறையை அனுபவிப்பர் என மதிப்பிடப்பட்டுள்ளது. அறிவிக்கப்படுவது குறைவாதலால் இந்த இலக்கங்கள் அதிகமாக இருப்பதற்குச் சந்தர்ப்பமுண்டு. 2SLGBTQ (இருபால்தன்மை, ஓரினச்சேர்க்கைப் பெண், ஓரினச்சேர்க்கை ஆண், இருபால்நாட்டம், மாற்றுப்பாலினம், பாலினத்தைக் கேள்விக்குரியதாக்குபவர்கள்) மற்றும் BIPOC (கறுப்பினத்தவர், முதல்குடிகள், சிறுபான்மையினர் (People of Colour)) மக்களுக்கு பாலியல் வன்முறைக்கான ஆபத்து அதிகமாகவுள்ளது.

## பாலியல் வன்முறை தொடர்பான பொதுவாக கட்டுக்கதைகள்

**கட்டுக்கதை:** பாலியல் வன்முறை என்பது பாலியலுடன் தொடர்பானது.

**உண்மை:** பாலியல் வன்முறை என்பது அதிகாரத்துடனும் இன்னொருவர் மேல் அதிகாரம் செலுத்துவதுடனும் தொடர்பானது.

**கட்டுக்கதை:** பெரும்பாலும் அந்நியர் ஒருவராலேயே பாலியல் வன்முறை செய்யப்படுகிறது.

**உண்மை:** பிழைத்துவாழும் ஒருவருக்குப் பழக்கப்பட்ட ஒருவராலேயே 87 சதவீதமான பாலியல் வன்முறைகள் செய்யப்படுகின்றன.

**கட்டுக்கதை:** உங்களுடைய துணைவரால் நீங்கள் பாலியல் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட மாட்டீர்கள்.

**உண்மை:** திருமணங்கள் உள்ளடங்கலாக எந்த நெருக்கமான உறவிலும் பாலியல் வன்முறை நிகழலாம்.

**கட்டுக்கதை:** அவருக்கு நிகழ்ந்த பாலியல் வன்முறை அனுபவத்துக்கு பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ குற்றம்சாட்டப்பட வேண்டியவர் பாதிக்கப்பட்டவர் / பிழைத்துவாழ்பவர் ஆகும்.

**உண்மை:** பின்வருவனவை ஒருவருக்குப் பொருந்தினாலென்ன பொருந்தாவிட்டாலென்ன பாதிக்கப்பட்டவரின் / பிழைத்துவாழ்பவரின் பாலியல் வன்முறை அனுபவத்துக்குக் காரணம் அவர் அல்ல –

- உடலைக் காட்டும் மற்றும்/அல்லது அடக்கமற்றவை எனக் கருதப்படும் உடுப்பை அணிந்திருந்தமை
- போதையில் இருந்தமை
- பாலியல்ரீதியாகக் கவரும் வகையில் நடந்து கொண்டமை
- வேண்டாம் எனச் சொல்லாமை அல்லது விட்டுவிலகாமை
- முதலில் ஒத்துக்கொண்டுவிட்டு பின் மனதை மாற்றியமை
- தொந்தரவுசெய்த, தாக்கிய மற்றும்/அல்லது துன்புறுத்தியவருடன் நண்பராக இருந்தமை, அவரை அறிந்திருந்தமை மற்றும்/அல்லது நம்பியமை
- அவருக்குக் கெடுதிசெய்வரைக் காதலித்தமை மற்றும்/அல்லது இன்னும் காதலித்தல்
- அவருக்குக் கெடுதிசெய்வருடன் தொடர்ந்தும் உறவைத் தொடர்ந்தமை
- அந்த அனுபவத்தை எவருக்கும் சொல்லாமை மற்றும்/அல்லது அறிவிக்காமை

அந்த நேர அனுபவத்தின்போது, இது பொதுவானது மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என நம்பியமை